


**02.10.2024**

பிரசார் பாரதி, அகில இந்திய வானொலி, திருச்சிராப்பள்ளி

வணக்கம். ஆகாசவாணி. மாநில செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தூய்மை இந்தியா இயக்கம் மக்கள் பங்களிப்பால் மாபெரும் வெற்றி இயக்கமாக உருவெடுத்துள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

2. தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளின் 155-வது பிறந்தநாளை ஒட்டி ராஜ்காட்டில் அன்னாரது நினைவிடத்தில் தலைவர்கள் இன்று அஞ்சலி செலுத்தினர்.

3. தேச நலன் காக்கும் கதர் கிராம பொருட்களை பொதுமக்கள் அதிகளவில் வாங்க முன்வர வேண்டுமென முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. முன்னோர்களை நினைவு கூறும் மஹாலய அமாவாசை தினம் இன்று கடைபிடிக்கப்பட்டது.

5. வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக திருச்சி, நாமக்கல், சேலம், உள்ளிட்ட 10 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖❖❖❖

<u>பிரதமர் – தூய்மை இயக்கம்</u>

உலகிலேயே தூய்மை இந்தியா இயக்கம் மக்கள் பங்களிப்புடன் கூடிய மாபெரும் வெற்றி இயக்கமாக உருவெடுத்திருப்பதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற ஸ்வச்பாரத் திவஸ் நிகழ்ச்சியில் 9 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான சுகாதாரம் மற்றும் தூய்மை சார்ந்த பல்வேறு புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி பேசிய பிரதமர், தூய்மை இந்தியாவை உருவாக்க தொடர்முயற்சியின் அவசியம் குறித்தும் வலியுறுத்தினார்.

கடந்த 15 நாட்களில் நடைபெற்ற தூய்மை சார்ந்த 27 லட்சத்திற்கும் மேற்பட்ட நிகழ்வுகள் நடைபெற்றதாகவும், இதில் 28 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

10 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான தூய்மை திட்டங்களை இன்று தொடங்கிவைத்த அவர், அம்ரித் திட்டத்தின் ஒரு பகுதியாக பல்வேறு நகரங்களில் குடிநீர் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என்றார்

தூய்மைபணிகளில் ஈடுபட்ட பணியாளர்கள், விளையாட்டு வீரர்கள், தன்னார்வலர்கள், ஊடக பணியாளர்கள் உள்ளிட்டோரையும் பிரதமர் பாராட்டினார்.

தூய்மை பாரத இயக்கம் துவங்கி 10 ஆண்டுகள் நிறைவை ஒட்டி நாடுமுழுவதும் பல்வேறு தூய்மை நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

❖❖❖❖❖❖❖❖❖❖

<u>பிரதமர் ஜார்க்கண்ட்</u>

பிரதமர் திரு. நரேந்திரமோடி ஜார்க்கண்ட் மாநிலத்தில் 83 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவதுடன் முடிவுற்ற திட்டப் பணிகளையும் தொடங்கி வைக்கிறார்.

மேலும் 25 ஏகலைவா பள்ளிகளுக்கு அடிக்கல் நாட்டும் பிரதமர், 40 ஏகலைவா பள்ளிகளை தொடங்கி வைக்கிறார்

தொடர்ந்து பல்வேறு திட்ட பயனாளிகளுடனும் அவர் கலந்துரையாடுகிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

<u>காந்தி ஜெயந்தி</u>

தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளின் 155-வது பிறந்தநாள் இன்று நாடுமுழுவதும் கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி புதுதில்லி ராஜ்காட்டில் உள்ள அன்னாரது நினைவிடத்தில் குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தன்கர்,

பிரதமர் திரு.நரேந்திரமோடி, மக்களவை எதிர்கட்சி தலைவர் திரு. ராகுல்காந்தி உள்ளிட்டோர் மலர்த்தூவி மரியாதை செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து சர்வமத பிரார்த்தனையும் நடைபெற்றது.

சென்னையில் காந்தி நினைவு மண்டபத்தில் அன்னாரது திருவுருவ படத்திற்கு மாநில ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி, மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்

அதனைத் தொடர்ந்து அங்கு நடைபெற்ற கதர் விற்பனை கண்காட்சியையும் பார்வையிட்டனர்.

இந்நாளை ஒட்டி சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியக வளாகத்தில் உள்ள அன்னாரது திருவுருவ சிலைக்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் மற்றும் மாநில அமைச்சர்கள் உள்ளிட்டோர் மலர்த்தூவி மரியாதை செலுத்தினர்.

திருச்சி தலைமை தபால் நிலையம் அருகேயுள்ள அண்ணல் காந்தியடிகளின் திருவுருவ சிலைக்கு மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. **K.N.** நேரு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அனைத்து மாவட்டங்களிலும், அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தலைமையில் காந்தி ஜெயந்தி விழா சிறப்பாக நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

<u>காந்தி கோவில்</u>

தேனி மாவட்டம் கம்பம் காமய கவுண்டன் பட்டியில் அமைந்துள்ள காந்தி கோவிலில் சுதந்திர போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்கள், பொதுமக்கள் உள்ளிட்டோர் இன்று மாலை அணிவித்து சிறப்பு பூஜை மேற்கொண்டனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

<u>லால்பகதூர் சாஸ்திரி</u>

முன்னாள் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் 120-வது பிறந்த தினமும் இன்று கொண்டாடப் படுகிறது.

இந்நாளையொட்டி அவரது நினைவிடம் அமைந்துள்ள விஜய்காட்டில் பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் மலரஞ்சலி செலுத்தினர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

<u>கிராம சபை கூட்டம்</u>

காந்தி ஜெயந்தியை ஒட்டி தமிழகத்தின் அனைத்து ஊராட்சிகளிலும் கிராமசபை கூட்டங்கள் இன்று நடைபெறுகின்றன.

இதில் ஊராட்சியில் மேற்கொள்ள வேண்டிய அடிப்படை வசதிகள், மாற்றுத்திறனாளிகள் பட்டியல் சரிபார்ப்பு, குடிநீர் திட்ட பணிகளில் பொதுமக்களின் பங்கேற்பை உறுதிசெய்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

❖❖❖❖❖❖❖❖❖❖

<u>ஆர். காந்தி – கிராம சபை</u>

தமிழக அரசு உள்ளாட்சிகளுக்கு முக்கியத்துவம் குறித்து கிராமப் பகுதிகளின் தேவைகளை பூர்த்தி செய்துவருவதாக மாநில கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. காந்தி தெரிவித்துள்ளார்

ராணிப்பேட்டை மாவட்டம் கத்தியவாடி கிராமத்தில் சிறப்பு கிராம சபை கூட்டத்தில் உரையாற்றி அவர், குடிநீர், சாலை உள்ளிட்ட பிரச்சனைகள் குறித்து அதிகாரிகளுக்கு உடனடியாக தெரிவித்தால் அவை விரைவில் சரிசெய்யப்படும் என தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

கதர் விற்பனை

தேச நலன் காக்கும் கதர் கிராம பொருட்களை பொதுமக்கள் அதிகளவில் வாங்க வேண்டுமென முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

நெசவாளர்களின் நலன்காக்க மாணாக்கர் அரசு ஊழியர்கள், இளைஞர்கள் அதிகளவில் கதர் ஆடைகளை பயன்படுத்த வேண்டுமென அறிவுறுத்திய அவர், கதர் பருத்தி, கதர் பட்டு ரகங்களை பொதுமக்கள் பெற ஏதுவாக 30 சதவிகித தள்ளுபடியில் விற்பனை செய்யப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

திருச்சி காதி விற்பனை நிலையத்தில் சிறப்பு விற்பனையை இன்று துவக்கி வைத்து பேசிய, மாநில அமைச்சர் திரு. **K.N.** நேரு, இந்த ஆண்டு தீபாவளி சிறப்பு விற்பனை இலக்காக 4 கோடியே 33 லட்ச ரூபாய் நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டார்.

கதர் வாரிய அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் மதிப்பு கூட்டப்பட்ட தேன் வகைகள், பாரம்பரியம் மிக்க அரிசி வகைகள் உள்ளிட்ட பொருட்களும் இங்கு விற்பனை செய்யப்படுவதாக கூறினார்.

இந்நிகழ்வின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. மா.பிரதீப்குமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

நாமக்கல், பெரம்பலூர், அரியலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கதர் காதி விற்பனையை இன்று தொடங்கிவைத்தனர்.

மகளிர் சுயஉதவிக்குழுவினரின் உற்பத்தி பொருட்களும் இந்த காதி விற்பனை நிலையத்தில் இடம்பெற்றுள்ளதாக திருச்சி கதர் கிராம தொழில்கள் துறை உதவி இயக்குநர் திரு கோபால கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

காமராஜர்

பெருந்தலைவர் காமராஜரின் 50-வது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் தமிழகத்தில் பள்ளி கல்வி மற்றும் தொழில் வளர்ச்சிக்கான அடிதளத்தை அமைத்துதந்த காமராசரின் கொள்கைகளை பின்பற்றி வெற்றி பாதையில் பயணிப்போம் என்று கூறியுள்ளார்.

விருதுநகர் மாவட்டத்தில் அவர் பயின்ற பள்ளியில் அன்னாரது திருவுருவ சிலையை மாநில அமைச்சர்கள் திரு. தங்கம் தென்னரசு, திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் உள்ளிட்டோர் இன்று திறந்து வைத்ததுடன் மலர்த்தூவி மரியாதை செலுத்தினர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

மஹாலய அமாவாசை

மஹாளய அமாவாசை இன்று பக்தி சிரத்தையுடன் கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி திருச்சி ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம், திருபுவனம் வைகை ஆறு, திருவள்ளூர் வைத்திய வீரராகவ பெருமாள் கோவில் குளக்கரை, ஈரோடு பவானி கூடுதுறை, மயிலாடுதுறை பூம்புகார் சங்கமுக தீர்த்தம், குற்றாலம், திருச்செந்தூர்

உள்ளிட்ட முக்கிய நீர்நிலைகளில் ஏராளமானோர் தங்கள் முன்னோர்களுக்கு நேர்த்திக்கடன் செலுத்தினர்.

கன்னியாகுமரி திரிவேணி சங்கமம் கடற்கரையில் ஆயிரக்கணக்கானோர் நீராடி தங்கள் முன்னோர்களுக்கு திதி கொடுத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

... வாய்ஸ் ....

நாகை, வேதாரண்யம், சன்னதி கடல் மற்றும் கோடியக்கரை ஆதிசேது கடலில் இன்றுகாலை முதல் ஏராளமானோர் புனித நீராடி தங்கள் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

<u>வன உயிரின வார விழா</u>

கொடைக்கானலில் வன உயிரின வார விழா இன்றுமுதல் வரும் 8-ம் தேதிவரை கொண்டாடப் படுகிறது.

இதை முன்னிட்டு வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள மோயர் சதுக்கம், பில்லர்ராக், குணாகுகை, பையின் மரச்சோலை, மன்னவனூர் சூழல் உள்ளிட்ட இடங்களை சுற்றுலா பயணிகள் பார்வையிட இன்று மட்டும் நுழைவுக் கட்டணம் ரத்து செய்யப்படுவதாக வனத்துறை அறிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

<u>வானிலை</u>

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக திருச்சி, நாமக்கல், சேலம், தர்மபுரி, கோவை, நீலகிரி, ஈரோடு, கரூர், கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் ஆகிய 10 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

மன்னார் வளைகுடா தென்தமிழக கடலோர பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளி காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

<u>மகளிர் கிரிக்கெட்</u>

ஐ.சி.சி மகளிர் உலக கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டிகள் ஷார்ஜாவில் நாளை தொடங்குகின்றன.

முதல் போட்டியில் பங்களாதேஷ் - ஸ்காட்லாந்தையும்

பாகிஸ்தான் - இலங்கையையும் எதிர்கொள்கின்றன

துபாயில் நாளைமறுநாள் நடைபெறும் போட்டியில் இந்தியா - நியூசிலாந்துடன் மோதவுள்ளது.

இருபிரிவுகளாக 10 அணிகள் பங்கேற்கும் இப்போட்டிகள் வரும் 20-ம் தேதிவரை நடைபெறும்.